සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

23 T I

පැය දෙකයි
*இரண்டு மணித்தியாலம்*
*Two hours*

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள்:**

* இவ்வினாத்தாள் **A, B** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
* பகுதி **A** பல்தேர்வு வினாக்கள் **30** இனையும் பகுதி **B** குறு வினாக்கள் **20** இனையும் கொண்டுள்ளன.
* சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 1 - 3 | |
| 2 | 4 - 10 | |
| 3 | 11 - 18 | |
| 4 | 19 - 24 | |
| 5 | 25 - 30 | |
| 6 | 31 - 38 | |
| 7 | 39 - 46 | |
| 8 | 47 - 50 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி A

* **1** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான** அல்லது **மிகவும் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

**1.** அரசியல் என்பது
(1) பொது நிர்வாகம் தொடர்பான விடயங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதாகும்.
(2) எப்போதும் சமூக நலனுடன் தொடர்புடையதாகும்.
(3) தேர்தல் செயன்முறைகளுடன் வரையறுக்கப்பட்டதாகும்.
(4) பிரசைகள் மத்தியில் நிலவும் ஒரு சமூகப் பிரயோகம் ஆகும்.
(5) சமூகத்தின் தார்மீக விழுமியங்களைக் கற்பதுடன் தொடர்புடையதாகும். (......)

**2.** அரசியல் விஞ்ஞானம்
(1) அரசியல் அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதனை நோக்காகக் கொண்டது.
(2) பொதுக் கொள்கையாக்கச் செயன்முறையினைக் கற்பதுடன் வரையறுக்கப்பட்டது.
(3) சமூக விஞ்ஞானத்தின் ஒரு பிரிவு / கிளையாகக் காணப்படுகின்றது.
(4) கட்சி அரசியலை அதைரியப்படுத்துகின்றது.
(5) பொது அறிவினை அடிப்படையாகக் கொண்டது. (......)

**3.** அரசியலமைப்புவாதம்
(1) தடைகள் மற்றும் சமன்பாடுகள் தத்துவத்தினை மழுங்கடிக்கிறது.
(2) பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்ற மரபுக்கு எதிராகச் செல்கின்றது.
(3) ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகத்தினை ஊக்குவிக்கின்றது.
(4) நிறைவேற்று மற்றும் சட்டத்துறைகளிடம் அரச அதிகாரம் குவிமையப்படுத்தப்படுவதற்கு உதவுகின்றது.
(5) பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தினைப் பாதுகாக்கின்றது. (......)

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**4.** சமூக ஜனநாயகம்
(1) 17ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது.
(2) தராண்மைவாதத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது.
(3) பிரித்தானிய பழமைபேண் கட்சியின் அரசியல் கருத்தியலாகக் காணப்பட்டது.
(4) முதலாளித்துவம், சோசலிசம் ஆகிய இரண்டினதும் பண்புகளைக் கொண்டுள்ளது.
(5) பொருளாதார அசமத்துவத்தை இல்லாதொழிப்பதற்கு முதலாளித்துவத்திற்கு இருக்கும் இயலுமையினை நம்பியது. (……)

**5.** சட்டத்தின் ஆட்சி
(1) அரசாங்கத்தின் பணியக வர்க்க அதிகாரத்துவத்தினை நியாயப்படுத்துகின்றது.
(2) அரசாங்கம் தேசிய அவசரகால நிலைமைகளின்போது எதேச்சைப் போக்கில் செயற்பட உதவுகின்றது.
(3) அரசாங்கத்தின் தீர்மானங்கள் எப்போதும் பெரும்பான்மையினரின் விருப்பத்தினை வெளிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.
(4) அரசியல் அதிகாரத்தினை பொறுப்புக்கூறலின்றிப் பயன்படுத்துவதனைத் தடுப்பதை நோக்காகக் கொண்டது.
(5) சோசலிசத்தின் ஒரு சட்ட எண்ணக்கருவாகும். (……)

**6.** பொதுக்கொள்கை உருவாக்கத்தில் அரசியல் கட்சிகளின் வகிபங்கில் அடங்குவது
(1) அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்காக மாத்திரம் பொதுமக்களின் பிரச்சினைகளைப் பயன்படுத்துதல்
(2) பொதுக்கொள்கையின் விளைவுகள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுதல்
(3) பொதுக்கொள்கை உருவாக்கச் செயன்முறையில் பொதுமக்களின் பங்குபற்றுதலைக் கட்டுப்படுத்துதல்
(4) பொதுக்கொள்கை உருவாக்கத்தின் ஊடாக தனியார் நலனை ஊக்குவித்தல்
(5) அரசியல் தலைமைத்துவம் பொதுக்கொள்கை விவாதங்களில் ஈடுபடுவதனை அதைரியப்படுத்துதல் (……)

**7.** இலங்கையின் அரசியல் கட்சி முறையின் அண்மைக்காலப் போக்குகளில் உள்ளடங்குவது
(1) மரபுரீதியான கட்சிக் கருத்தியல்களைத் தொடர்ச்சியாகப் பேணிச் செல்வதாகும்.
(2) இன - மத கட்சிகள் இல்லாதுபோயுள்ளமையாகும்.
(3) மரபுரீதியான இடதுசாரிக் கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்துள்ளமையாகும்.
(4) மரபுரீதியான இரு பிரதான கட்சிகளின் வீழ்ச்சியாகும்.
(5) கட்சிகளின் உள்ளக முரண்பாடுகள் குறைவடைந்துள்ளமையாகும். (……)

**8.** இலங்கையின் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் விளைவாக அமைவது
(1) சிறிய கட்சிகள் அதிக பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையாகும்.
(2) தேர்தல் வன்முறைகள் குறைவடைந்துள்ளமையாகும்.
(3) தேசியப்பட்டியல் அறிமுகம் செய்யப்பட்டமையினால் ஜனநாயகம் வலுப்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(4) தேர்தல் பிரசாரத்துக்கான செலவுகள் குறைந்துள்ளமையாகும்.
(5) இனத்துவ அடையாளத்துடன் அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுவதனைத் தடுத்துள்ளமையாகும். (……)

**9.** இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பு (1972)
(1) பொதுச்சேவையினை அரசியல் நிறைவேற்றுத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்தது.
(2) அரச அதிகாரிகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல் ஆகியன தொடர்பான அதிகாரத்தினை அமைச்சரவைக்கு வழங்கியது.
(3) அரச சேவைகள் ஆலோசனைச் சபையினை இல்லாதொழித்தது.
(4) அரச சேவையின் சுயாதீனத் தன்மையினை உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்பு ஏற்பாடுகளை அறிமுகம் செய்தது.
(5) அரச சேவைக்கான ஆட்சேர்ப்புச் செயன்முறையினை அரசியல் கலப்பற்றதாக்கியது. (……)

**10.** சர்வதேச அரசியலில் தேசிய நலன்களை அடைந்துகொள்வதற்குக் காணப்படும் வழிமுறையாக (ஊடகம்) அமைவது
(1) இராஜதந்திர தொடர்புகள்
(2) அரசியல் கட்சிகள்
(3) பல்தேசியக் கம்பனிகள்
(4) உயர் குழாமினர்
(5) சமூக இயக்கங்கள் (……)

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,

**11.** சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை
(1) தெற்காசியப் பிராந்திய அரசுகளின் முக்கியத்துவத்தினை அலட்சியம் செய்தது.
(2) சோசலிசக் கருத்தியல் ஊடாக வழிப்படுத்தப்பட்டது.
(3) அதிகாரத்தில் இருக்கும் ஆட்சியாளர்களின் கருத்தியல் மற்றும் நலன்களினால் வடிவமைக்கப்படுகின்றது.
(4) இலங்கையின் மூலோபாய அமைவிடத்தின் நன்மைகளை எப்பொழுதும் மறுதலித்துள்ளது.
(5) ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளின் ஊடாகத் தீர்மானிக்கப்பட்டது. (......)

**12.** அரசியல் விஞ்ஞானத்தில் நடத்தைவாத அணுகுமுறை
(1) புராதன கிரேக்க காலமளவிற்குச் செல்லும் வரலாற்றைக் கொண்டது.
(2) அனுபவவாத ஆய்வுடன் தொடர்புடையது.
(3) அரசியல் நிறுவனங்களின் வரலாற்றினை வலியுறுத்துகின்றது.
(4) அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகளின் ஆதரவினைப் பெறத் தவறியது.
(5) தனிப்பட்டவர்களுடைய அரசியல் நடத்தைகளை ஆய்வு செய்வதனை அலட்சியம் செய்கின்றது. (......)

**13.** அரசாங்கம்
(1) அரசினை விட நீண்ட இருப்பினைக் கொண்டுள்ளது.
(2) சமூகத்தின் அரசியல் அதிகாரத்தின் மத்திய நிறுவனமாகும்.
(3) அரசின் பிரதான முகவர் நிறுவனமாகும்.
(4) தேசத்தின் வெளி இறைமையினைக் கொண்டுள்ளது.
(5) அரசு என்ற எண்ணக்கருவுக்குச் சமாந்தரமானது. (......)

**14.** இந்திய மதசார்பின்மைவாதம் வலியுறுத்துவது,
(1) சகல மதங்களும் அரச மதங்களாகக் கருதப்படுவதனையாகும்.
(2) அரசு சகல மதங்களையும் பக்கச்சார்பின்றிக் கவனிப்பதனையாகும்.
(3) சகல பிரஜைகளினதும் இனத்துவ அடையாளங்களை மதிப்பதனையாகும்.
(4) சிறுபான்மை மதங்களுக்கு விசேட கவனிப்பு வழங்கப்படுவதனையாகும்.
(5) மதங்களைக் கற்பிப்பது தொடர்பாக ஏற்படும் தத்துவார்த்த சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு அரசு தலையிடுவதனையாகும். (......)

**15.** தாராண்மைவாதம்
(1) அரசு வர்க்கச் சமூகங்களில் நிலைகொள்ளும் என வாதிடுகின்றது.
(2) பிரஜைகளின் தனிப்பட்ட சுதந்திரத்தினைப் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டது.
(3) வர்த்தகச் செயற்பாடுகளில் அரசின் தலையீட்டினை ஊக்குவிக்கின்றது.
(4) மாக்சியவாதிகளால் ஆதரவு வழங்கப்பட்ட ஓர் அரசியல் கருத்தியலாகும்.
(5) சிவில் சமூகச் செயற்பாட்டினை அதைரியப்படுத்துகின்றது. (......)

**16.** சுவிட்சர்லாந்து
(1) ஓர் அர்த்த (அரைகுறை) சமஷ்டி என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(2) ஒப்பீட்டளவில் மேம்பட்ட சமஷ்டி முறையினைக் கொண்ட ஒரு பெரிய நாடாகும்.
(3) பங்கீட்டு ஆட்சி (shared rule), சுய ஆட்சி (self rule) என்பவற்றினை இலகுபடுத்தும் அரசியலமைப்பு மூலதத்துவங்களைக் கொண்டுள்ள நாடாகும்.
(4) கன்டோன்களுக்குச் சுயாட்சியினை வழங்கவில்லை.
(5) ஓரங்க சட்டசபையினைக் கொண்டுள்ளது. (......)

**17.** ஐக்கிய அமெரிக்காவின் அரசியலமைப்பு
(1) அதிகாரப் பிரிவினைக்கான ஏற்பாடுகளை வழங்கவில்லை.
(2) குடியரசுவாதத்தினை நிராகரிக்கின்றது.
(3) முன்னர் காணப்பட்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பினை இல்லாதொழித்து உருவாக்கப்பட்டுள்ளது.
(4) வெளிநாட்டு அரசுகளுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது.
(5) மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை மாத்திரம் பட்டியலிட்டுள்ளது. (......)

**18.** ஜனாதிபதி அரசாங்க முறைமைக்குரிய தத்துவமாக அமைவது
(1) சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத் துறைக்குத் தனித்தனியான தேர்தல் இடம்பெறுகின்றமை
(2) நிறைவேற்றுத்துறை தனது இருப்புக்குச் சட்டத்துறையில் தங்கியிருத்தல்
(3) ஜனாதிபதி அரசின் தலைவர் அல்லாதிருத்தல்
(4) சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறையின் பதவிக்காலம் ஒரே தடவையில் முடிவுக்கு வருதல்
(5) ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்றுவது ஒப்பீட்டளவில் இலகுவான காரியமாதல் (......)

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

**19.** வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரி அரசாங்க முறை
(1) பிரான்சிய அரசாங்க முறைக்கு ஒப்பானது.
(2) அரசின் தலைவரை பொதுத் தேர்தல் ஊடாக தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்குகின்றது.
(3) பாராளுமன்றம் சட்டவாக்கத்தில் மீயுயர்த்தன்மையினைக் கொண்டுள்ளது.
(4) சட்டங்களை நீதிப்புனராய்வுக்கு உட்படுத்த அனுமதியளிக்கிறது.
(5) கெபினட் அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்புக்கான ஏற்பாடுகளை வழங்குவதில்லை. (……)

**20.** இலங்கையின் டொனமூர் அரசியலமைப்பு
(1) விகிதாசார பிரதிநிதித்துவ முறையினை அறிமுகம் செய்தது.
(2) தேசாதிபதியை அமைச்சர்கள் சபையின் தலைவராக்கியது.
(3) ஜனநாயக அரசாங்கத்துக்கான அடித்தளத்தினை இட்டது.
(4) இனவாரிப் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவித்தது.
(5) பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதை நிராகரித்தது. (……)

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட கூற்றுகளிலிருந்து **சரியான கூற்றுத் தொகுதியினைக்** கொண்ட விடையைத் தெரிவு செய்க.

**21.** சோல்பரி அரசியலமைப்பின் வெஸ்ட்மின்ஸ்டர் பண்புகளாக அமைவன
A - மகா தேசாதிபதி நாம நிர்வாகியாகக் காணப்பட்டமை
B - அரசியல் நிறைவேற்றுத்துறை பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்டமை
C - சட்டத்துறை ஈரங்க சபையாகக் காணப்பட்டமை
D - பிரதமர் அமைச்சரவையின் தலைவராகக் காணப்பட்டமை
E - மகா தேசாதிபதி பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற கடமைப்பட்டிருந்தமை

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

**22.** இலங்கையின் 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயம்
A - சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை உறுதி செய்கின்றது.
B - அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக எந்த ஒரு நீதிமன்றத்திலும் மனுத்தாக்கல் செய்வதற்கு பிரஜைகளுக்கு வாய்ப்பளிக்கின்றது.
C - அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
D - கூட்டு மற்றும் சமூக உரிமைகள் உள்ளடக்கப்படாமையினால் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.
E - அவசரகால நிலைமைகளின்போது அடிப்படை உரிமைகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கின்றது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

**23.** சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல்
A - அடிமட்ட சமாதான முயற்சிகளை மாத்திரமே ஊக்குவிக்கின்றது.
B - ஒவ்வொரு நாட்டினதும் பிரத்தியேக சூழலுக்கேற்ப வடிவமைக்கப்படுகின்றது.
C - நீண்டகால மோதல்கள் இடம்பெற்ற சமூகங்களில் நிலையான சமாதானத்தை வலியுறுத்துகின்றது.
D - பிரசைகள் மற்றும் சிவில் சமூக இயக்கங்களினது பங்குபற்றுதலை வலியுறுத்துகின்றது.
E - நேர்க்கணிய (positive) மற்றும் எதிர்க்கணிய (negative) சமாதானம் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கியுள்ளது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

**24.** இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பின் (1972) கீழ் சட்டத்துறை
A - நீதித்துறையின் மீளாய்விற்கு (கண்காணிப்புக்கு) உட்படவில்லை.
B - அரச அதிகாரத்தின் மீயுயர் கருவியாகக் கருதப்பட்டது.
C - பிரித்தானிய பாராளுமன்ற முறையில் இருந்து வேறுபட்டிருந்தது.
D - ஈரங்க சபையாகக் காணப்பட்டது.
E - உத்தியோகபூர்வமாக தேசிய அரசுப் பேரவை என அழைக்கப்பட்டது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka , Department of Examinations Sri Lanka ,

**25.** அமெரிக்க சமஷ்டி அரசாங்க முறை

A - மாநிலங்களின் சுயாதீனத்தன்மை என்ற சிந்தனையில் உருவாக்கப்பட்டுள்ளது.

B - அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு மாநில சட்டசபைகளின் அனுமதியினைக் கோருகின்றது.

C - மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு ஒத்தியங்கு அதிகாரத்தினை வழங்கவில்லை.

D - ஈரங்க சட்டசபை ஒன்றினை உருவாக்கியது.

E - அரசியலமைப்பின் மேலான்மையினை ஒரு முக்கியமான அடிப்படைத் தத்துவமாக நோக்குகின்றது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

- **26** தொடக்கம் **30** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுகளைக் கொண்டுள்ளன. பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து பின்வரும் இரு கூற்றுகளுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடையின் இலக்கத்தினைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விவரிக்கின்றது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று | |
|---|---|---|---|
| **26.** | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளி ஒருவருக்கு பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தை ஜனாதிபதி மாத்திரம் கொண்டுள்ளார். | அப் பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு முன்னர் ஜனாதிபதி உச்சநீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். | (……) |
| **27.** | 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்படுவர். | இலங்கையின் அடிப்படை உரிமைகள், இன, மத ஒற்றுமை மற்றும் தேசிய பொருளாதாரம் என்பனவற்றின் நலன்களுக்காக சட்டரீதியான மட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியுள்ளன. | (……) |
| **28.** | 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 20ஆம் திருத்தத்திற்கிணங்க பாராளுமன்றப் பேரவை 5 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. | 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 20ஆம் திருத்தத்தின்படி தாபிக்கப்பட்ட பாராளுமன்றப் பேரவையின் உறுப்பினர்களுள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்வாங்கப்படவில்லை. | (……) |
| **29.** | 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி பாராளுமன்ற அமர்வுகளை முடிவுறுத்துவதற்கான அதிகாரத்தை சபாநாயகர் கொண்டுள்ளார். | பாராளுமன்றத்தைக் கலைக்கின்றபோது அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்க வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு இல்லை. | (……) |
| **30.** | 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தின்படி மாகாண ஆளுநர் மாகாணசபையின் முதலமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார். | மாகாணசபையின் அமைச்சர்கள்சபைக்கு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு உண்டு. | (……) |

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

## பகுதி B

**31.** அரசியலைக் கற்பதற்கான ஒப்பீட்டு அணுகுமுறை மூன்று மரபுகளைக் கொண்டுள்ளது. அவற்றில் **இரண்டினைத்** தருக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**32.** உலகில் அரசியல் கட்சி முறைகள் பல காணப்படுகின்றன. அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**33.** அரசியல் மற்றும் சமூகக் கோட்பாடுகளில் சிவில் சமூகம் என்ற எண்ணக்கரு நான்கு அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகின்றது. அவற்றில் **இரண்டினைத்** தருக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**34.** அரசு என்பது சமூகத்தில் காணப்படும் மிக உயர்ந்த மானிட அமைப்பாகும் என்ற கருத்து அரசியல் கோட்பாட்டில் இரண்டு விளக்கங்களைக் கொண்டுள்ளதுடன், அவை இரண்டு சிந்தனையாளர்களுடன் அடையாளப்படுத்தப்படுகின்றன. அவ் விளக்கங்கள் **இரண்டும்** யாவை?

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**35.** (1) பெண்களை அரசியலில் இருந்து ஒதுக்கி வைப்பதனைக் கேள்விக்குட்படுத்தும் அரசியல் அணுகுமுறை எது?

..............................................................................................................

(2) பொருளாதார மற்றும் சமூக வர்க்கத்தின் அடிப்படையிலேயே அரசியல் தீர்மானிக்கப்படுகின்றது என்பதனை வலியுறுத்தும் அரசியல் அணுகுமுறை யாது?

..............................................................................................................

**36.** (1) சட்டம் சகலருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தும் சட்டத்தின் ஆட்சியின் (rule of law) ஒரு பகுதியாகக் காணப்படும் ஜனநாயக தத்துவம் யாது?

..............................................................................................................

(2) அரசாங்கத்தின் அதிகாரம் குறித்தவொரு நிறுவனத்தில் குவிமையப்படுத்தப்படுவதனைத் தடுப்பதற்கு ஜனநாயக ஆட்சிமுறைகளில் பயன்படுத்தப்படும் தத்துவம் எது?

..............................................................................................................

**37.** (1) இந்தியாவின் அரசாங்க முறை எத்தகைய அரசியலமைப்பு மாதிரியினைக் கொண்டுள்ளது?

..............................................................................................................

(2) பிரான்சின் அரசாங்க முறை எத்தகைய அரசியலமைப்பு மாதிரியினைக் கொண்டுள்ளது?

..............................................................................................................

**38.** பணியகவமைப்பு தொடர்பான மெக்ஸ் வெபரின் கோட்பாட்டில் மூன்று அதிகாரத்துவ முறைகள் காணப்படுகின்றன. அவற்றில் **இரண்டினைத்** தருக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

**39.** (1) இலங்கையில் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் எந்த ஆண்டில் பதவிக்கு வந்தது?

.................................................................................................................................

(2) இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கான 20ஆம் திருத்தம் எந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது?

.................................................................................................................................

**40.** 1833ஆம் ஆண்டு இலங்கையின் அரசாங்க முறை, நீதி நிர்வாகம் என்பனவற்றில் மறுசீரமைப்புக்களை முன்வைத்த ஆணைக்குழுவின் **இரண்டு** உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(1) .............................................................................................................................

(2) .............................................................................................................................

**41.** இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தின் அதிகார பரவலாக்க முறையின்படி அதிகாரங்கள் மூன்று பட்டியல்களில் காணப்படுகின்றன. அவற்றில் **இரண்டினைத்** தருக.

(1) .............................................................................................................................

(2) .............................................................................................................................

**42.** அரசின் இறைமை அதிகாரத்தின் **இரண்டு** வகைகளைக் குறிப்பிடுக.

(1) .............................................................................................................................

(2) .............................................................................................................................

**43.** 1947ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின் இலங்கை பாராளுமன்றம் மூன்று நிறுவனங்களைக் கொண்டிருந்தது. அவற்றில் ஒன்று சனப்பிரதிநிதிகள் சபை ஆகும். ஏனைய **இரண்டு** நிறுவனங்களையும் குறிப்பிடுக.

(1) .............................................................................................................................

(2) .............................................................................................................................

**44.** (1) நவீன தேசிய அரசு முறையின் தோற்றம் 17ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவ்வுடன்படிக்கையின் பெயரைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

(2) சிறிய அரசுகள் வல்லரசு சக்திகள் தொடர்பாக நடுநிலைமையினைப் பேணவேண்டும் என வலியுறுத்தும் வெளிநாட்டுக் கொள்கை அணுகுமுறையின் பெயர் யாது?

.................................................................................................................................

**45.** (1) உலக முறைமை **இரு** அதிகார முகாம்களாகப் பிரிந்து இருப்பதனை விவரிக்கின்ற எண்ணக்கரு யாது?

.................................................................................................................................

(2) உலக முறைமையினை **ஒரு** தனி உலக அதிகார முகாம் என விவரிக்கின்ற எண்ணக்கரு யாது?

.................................................................................................................................

**46.** மோதலைத் தடுப்பதற்கு **இரண்டு** வழிமுறைகள் காணப்படுகின்றன. அவை யாவை?

(1) .............................................................................................................................

(2) .............................................................................................................................

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka , Department of Examinations Sri Lanka ,

**47.** பொதுக் கொள்கைக் கற்கையானது **இரண்டு** வடிவங்களைக் கொண்டுள்ளது. அவற்றைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................

**48.** (1) அரசு இல்லாத நிலையில் காணப்பட்ட மானிட வாழ்க்கையினை விவரிக்க சமூக ஒப்பந்தக் கோட்பாட்டில் பயன்படுத்தப்பட்ட எண்ணக்கரு யாது?

......................................................................................................

(2) தாராண்மைவாத அரசியல் கோட்பாட்டினை ஆரம்பித்துவைத்த அரசியல் சிந்தனையாளரின் பெயரைக் குறிப்பிடுக.

......................................................................................................

**49.** (1) அரசினை வழிபடுவதனை வலியுறுத்திய 20ஆம் நூற்றாண்டின் அரசியல் கருத்தியல் எது?

......................................................................................................

(2) தோமஸ் ஹொப்சினால் எழுதப்பட்ட அரசியல் கோட்பாடு தொடர்பான நூல் எது?

......................................................................................................

**50.** ஒரு கருத்தியல் என்ற வகையில் தேசியவாதத்தினை மூன்று அணுகுமுறைகளின் கீழ் விளங்கிக்கொள்ள முடியும். அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................

* * *

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.

※ பகுதி **I** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் பகுதி **II** இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையும் பகுதி **III** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. அரசியலைக் கற்பதற்கான சமூகவியல் அணுகுமுறையினை விவரிக்குக. (20 புள்ளிகள்)

2. (i) 'அரசியற் கருத்தியல்' என்ற எண்ணக்கருவை வரையறை செய்க. (05 புள்ளிகள்)
   (ii) ஓர் அரசியற் கருத்தியல் என்ற வகையில் 'சோசலிசத்தினை' விவரிக்குக. (15 புள்ளிகள்)

3. (i) 'அரசு' என்ற எண்ணக்கருவை வரையறை செய்க. (05 புள்ளிகள்)
   (ii) சமூகத்தில் அரசின் வகிபங்கினை விளக்குக. (10 புள்ளிகள்)
   (iii) அரசாங்கம் அரசில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? (05 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) இலங்கையில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் ஏற்பட்ட **பொருளாதார** நிலைமாற்றத்தினைச் சுருக்கமாக ஆராய்க. (10 புள்ளிகள்)
   (ii) பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கையில் ஏற்பட்ட நிலைமாற்றத்தின் **சமூக** அம்சங்களை விவரிக்குக. (10 புள்ளிகள்)

5. (i) சோல்பரி அரசியலமைப்பில் காணப்பட்ட சிறுபான்மை இனக்குழுக்களுக்கான உரிமைக் காப்பீட்டு ஏற்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)
   (ii) மேலே (i) இல் குறிப்பிட்ட ஏற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்தனவா என்பதனைச் சுருக்கமாக ஆராய்க. (10 புள்ளிகள்)

6. இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கு அறிமுகம் செய்யப்பட்ட பின்வரும் திருத்தங்கள் ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பாக ஏற்படுத்திய மாற்றங்களை எடுத்துக்காட்டுக.
   (i) 18ஆவது திருத்தம் (10 புள்ளிகள்)
   (ii) 19ஆவது திருத்தம் (10 புள்ளிகள்)



Department of Examinations Sri Lanka

**7.** (i) 'மோதல்' (Conflict) என்ற எண்ணக்கருவை வரையறை செய்க. (05 புள்ளிகள்)

(ii) மோதல்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன என்பதனை உதாரணங்கள் வழங்கி விவரிக்குக. (10 புள்ளிகள்)

(iii) மோதல் தீர்வின் ஒரு வழிமுறை (ஊடகம்) என்ற வகையில் பேச்சுவார்த்தை (Negotiation) என்ற எண்ணக்கருவினைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

## பகுதி III

**8.** பிரான்சின் டிகோல் (Guallist System) அரசாங்க முறையின் பிரதான பண்புகளை விவரிக்குக. (20 புள்ளிகள்)

**9.** (i) 'பொதுக் கொள்கை' என்பதனை வரையறை செய்க. (05 புள்ளிகள்)

(ii) பொதுக் கொள்கை செயன்முறையில் அரசியல் நிறைவேற்றுத்துறை மற்றும் நிரந்தர நிறைவேற்றுத்துறையின் வகிபங்கினை விளக்குக. (15 புள்ளிகள்)

**10.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

(ii) ஜனநாயக அரசாங்கத்தின் பிரதான பண்புகள்

(iii) சர்வதேச அரசியலில் அரசு சார்ந்த செயற்பாட்டாளர்கள்

(iv) இந்திய அரசாங்க முறையின் பிரதான பண்புகள்

(v) அரசியற் கட்சிகளின் பணிகள் (10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI



Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,